//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.85/2018**

**prosecution witness: PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

A4, A5 present. A1 to A3, A6 absent.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | காளிதாஸ் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**<u>14.02.2024</u>**

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது இராமநாதபுரம் வனஉயிரினக்கோட்டம் வனப்பாதுகாப்புபடையில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ நாளான 08.01.2017-ம் தேதி வனச்சரக அலுவலகத்தில் இருந்தபோது வனச்சரக அலுவலர் திரு.சு.சதீஷ் அவர்களுக்கு மதியம் சுமார் 2.15 மணியளவில் மண்டபம் வேதாளை ஆற்றுக்கரை பகுதியில் கடல் அட்டைகள் கடத்துவதாக அவருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி வனச்சரகர் தலைமையில் நானும், வனக்காப்பாளர் திரு.ராதா, வனக்காப்பாளர் திரு.முனியசாமி மற்றும் வேட்டைத்தடுப்பு காவலர்கள் ஆகியோர்கள் மண்டபம் வேதாளை ஆற்றுக்கரை பகுதிக்கு ரோந்து செய்தபோது ஆற்றுப்பகுதியில் சந்தேகப்படும் படியாக ஒரு தள்ளுவத்தை வந்து கொண்டிருந்ததை பார்த்து நாங்கள் அதை சோதனை செய்ய செல்லும்போது அந்த தள்ளுவத்தை தள்ளிக்கொண்டு வந்தவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

2. தப்பியோடிய ஒருவரை பிடித்து வனச்சரகர் அவரிடம் விசாரணை செய்து அவர் முன்பாக அந்த தள்ளுவத்தையை சோதனை செய்தபோது அதில் 35 சிமெண்ட் சாக்குப்பைகளில அரசால் தடைசெய்யப்பட்ட இறந்த நிலையில் பச்சைக் கடல் அட்டைகள் இருந்தது கண்டறியப்பட்டது. பின்பு வனச்சரக அலுவலர் விசாரித்தபோது அவர் பெயர் துல்காஜ், தெற்கு தெரு, வேதாளை என்று தப்பியோடிய எதிரிகள் பற்றி விசாரணை செய்து கொண்டிருந்தபோது சற்றும் எதிர்பராதவிதமாக சுமார் 50 பேர் கொண்ட கும்பல் கம்பு, கல், கட்டை, கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கினர். அதில் வேட்டைத் தடுபபு காவலர் திரு.முனீஸ் பிரசாத் அவர்களுக்கு நெஞ்சு மற்றும்

முதுகு பகுதியில் தாக்கினார்கள். உடனே வனச்சரக அலுவலர் மண்டபம் காவல் ஆய்வாளருக்கு அழைபேசி மூலம் தொடர்பு கொண்டு உதவிக்கு அழைத்தார். அவர்கள் வருவதை அறிந்த எதிரிகள் துல்காஜை இழுத்துக்கொண்டு தலைமறைவாக ஓடிவிட்டார்கள்.

3. பின்பு மேல்நடவடிக்கைக்காகபிடிபொருட்களான கடல் அட்டைகள், வத்தையை வனச்சரக அலுவலகம் கொண்டு வந்தோம். வனச்சரக அலுவலர் தகவல் சொன்னதன் பெயரில் சம்பவ இடத்திற்கு இராமநாதபுரம் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் போலீஸ் பார்ட்டி சகிதம் சம்பவ இடத்திற்கு வந்து நடந்ததை பற்றி வனச்சரகரிடம் விசாரித்தார்கள்.

4. வனச்சரக அலுவலருக்கு வேதாளையில் கடல் அட்டைகள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் படி வனச்சரகர் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் வேதாளைதெற்கு தெருவில் கதவு எண் இல்லாத ஒரு காலி இடத்தில் சோதனை செய்தபோது அங்கு அவித்து பதப்படுத்தப்பட்ட சுமார் 36 கிலோ எடையுள்ள கடல் அட்டைகள் இருப்பதை கண்டறிந்து அவற்றை அவிப்பதற்கு பயன்படுத்திய அலுமினியச் சட்டிகள், பிளாஸ்டிக் கேன் உட்பட சம்பவ இடத்தில் பார்வை மகஜர் தயார் செய்தோம். அந்த பார்வை மகஜரில் பிடிபொருட்களை கைப்பற்றி வனச்சரக அலுவலகம் கொண்டு வந்தோம்.

5. பின்பு மேல்நடவடிக்கைக்காக ஆவணங்கள் தயார் செய்யும்போது வனச்சரகருக்கு உதவியாக இருந்தேன். பார்வை மகஜர் என்னால் தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.3 ஆகும். H நமூனா என்னால் தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் H நமூனாவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த H நமூனா அ.சா.ஆ.4 ஆகும்.

குற்றச்சாட்டு வனைந்த பிறகு குறுக்கு விசாரணை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்